வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P.1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 04.06.2024 வியாழக்கிழமை இதழ் : 186 பக்கங்கள் : 12

# இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு நேற்று பாராளுமன்றில் அஞ்சலி!

கொழும்பு, ஜூலை 04

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் பூதவுடல் நேற்று புதன் கிழமை பாராளுமன்றில் வைக்கப்பட்டு அஞ் சலி செலுத்தப்பட்டது.**



சம்பந்தனின் பூதவுடல் நேற்று மதியம் வரை பொரளையிலுள்ள தனியார் மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக் கப்பட்டிருந்தது.

பிற்பகல் பாராளுமன்றத் துக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

அங்கு, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச் சர்கள், பாராளுமன்ற உறுப் பினர்கள், அரசியல்வாதிகள், தூதரக அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர்.

இதேநேரம், சம்பந்தன் படித்த பாட சாலைகளில் ஒன்றான யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையினரும் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் வழக்கை விசாரிக்க உயர்நீதிமன்றம் தடை!

கொழும்பு,ஜூலை 04

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் தீ விபத்து தொடர்பில் கப்பலின் தலைமை அதிகாரி மற்றும் உள்ளூர் பிரதிநிதிகள் நிறுவனத்தின் பணிப் பாளர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட வழக்கின் விசாரணையை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் இடைக் கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் உள்ளூர் முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் சட்ட விரோதமானவை எனத் தெரிவித்து தாக்கல் செய் யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு கொழும்பு துறை முகத்திற்கு வடமேற்கு பகுதியில் 9.5 கடல் மைல் தொலைவில் நங்கூரமிட்ட எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள்என்ற கொள் கலன் கப்பலில் ஏற்பட்ட தீ இப்போது கட்டுப் பாட்டு அறை அமைந் துள்ள கப்பலின் பின் பகுதிக்கு பரவியுள்ளதுடன் 11

# சம்பந்தனின் பூதவுடலுக்கு யாழில் அஞ்சலி!

யாழ்ப்பாணம்,ஜூலை 04

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத் தில் மக்களின் அஞ்சலிக் காக வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் (யாழ். மத்திய கல்லூரி அருகில்) காலை 9 மணி முதல் பிற்பகல் 11

# த. தே. கூட்டமைப்பின் தலைவராக குகதாசன்!

## மத்திய குழு தீர்மானித்ததாம் என்கிறார் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஜூலை 04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய தலைவராக ச. குகதாசனை நியமிப்பது என்று மத்திய குழு தீர்மானித் துள்ளது என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் நினைவேந்தல் நேற்று 11

# குளவி கொட்டுக்கு இலக்காகி பண்டத்தரிப்பில் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

குளவி கொட்டுக்கு இலக்காகி பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பு - செட்டிகுறிச்சியை சேர்ந்த குணசேகரம் வரதசிரோன்மணி என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த பெண் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை, அவரின் வீட்டருகே உள்ள காணிக்குள் பனை யோலை எடுக்க சென்றுள்ளார். அந்தச் சமயம் கருங் குளவி கொட்டுக்கு இலக்கானார். 11

# நாட்டின் பொருளாதார மீட்சியில் ஜப்பான் மிகமுக்கிய வகிபாகம்!

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி

கொழும்பு, ஜூலை 04

இலங்கையின் பொருளாதார மீட்சியில் ஜப்பான் பரஸ்பர நன்மையளிக்கக்கூடிய மிகமுக்கிய வகிபா கத்தை கொண்டிருப்பதாக கருதுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிக வாவின் அழைப்பின்பேரில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இம்மாதம் 1 - 7 ஆம் திகதி 11

# பருத்தித்துறையில் போதைப்பொருள் மீட்பு!

வடமராட்சி, ஜூலை 04

பருத்தித்துறை - புலோலியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகை போதைப் பொருட்கள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட போதைப் பொருட்களில் ஒரு கிலோ கஞ்சா, 290 போதை மத்திரைகள் மற்றும் தராசு ஒன்று என்பனவும் மீட்கப்பட்டன.

நேற்று புதன்கிழமை இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே 11

# நயினாதீவில் படகு கவிழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கு பொருட் களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தை சேர்ந்த இந்திரலிங் கம் அருண் (கோபி) என்ற 42 வயதான இரண்டு பிள்ளை களின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கு இடையில் பொருள்கள் ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபட்ட படகு ஒன்று நான்கு தொழிலாளர்களுடன் நேற்று முன் தினம் இரவு 7 மணிக்கு பயணித்தது. 11

# சிறீ லங்கன் எயார்லைன்ஸ் விற்பனை செய்யப்படாது!

## விமான சேவைகள் அமைச்சர் நிமால்

கொழும்பு, ஜூலை 04

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் விற்பனை செய்யப்படவில்லை. மறுசீரமைப்பு பணிகள் மாத்திரமே செய்யப் படுகின்றன என்று துறைமுகங்கள், கப்பல் துறை மற் றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய சந்திப்பிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக் குத் தேவையான கடன் மறுசீரமைப்பின் முன் னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (நேற்றுமுன்தினம்) பாராளுமன்றத்தில் 11

# ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிப்பை தடுக்குமாறு மனு!

## உயர்நீதிமன்றில் நேற்று தாக்கல்

கொழும்பு, ஜூலை 04

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடுவதை தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் முரண் பாடுகள் உள்ளன. இது தொடர்பிலான அரசமைப்பு சிக் கல் தீர்க்கப்படும் வரை தேர்தலுக்கான திகதி அறி விப்பை ஒத்திவைப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக் கப்பட வேண்டும் என்று கோரியே இந்த மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 11

# லயன் குடியிருப்பில் தீ; தம்பதியர் எரிந்து பலி!

கொழும்பு, ஜூலை 04

லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் தம்பதியர் எரியுண்டு உயிரிழந்தனர். அத்துடன், 5 வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகின.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தத் தீ விபத்தில் கேகாலை - யட்டியாந்தோட்டை - பனாவத்தை தோட் டம் இலக்கம் - 02 பிரிவில் உள்ள லயன் குடியிருப்பே தீயில் எரிந்து நாசமானது.

இந்த விபத்தில் 50, 60 வயதான தம்பதியரை எரி யுண்டு பலியாகினர்.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

மறைந்த தலைவர் சம்பந்தன் பற்றி பலரும் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். அவர் பற்றி நமது மூத்த பத்திரிகையாளர் சு. மகாலிங்கசிவம் (மாலி) தனது முகநூலில் எழுதியுள்ள குறிப்பு ஒன்று, இந்த ஊர்க்குருவியின் கவனத்தைப் பெற்றிருந்தது. அது ஊர்க்குருவியின் வாசகர்களுக்கும் சென்றடையவேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டதைத் தவிர்க்க முடியவில்லை.

அதனை அப்படியே தருகின்றேன்:

"தனிநாடு கோரிக்கையுடன் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரானார். ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் பிரதமராக ஆட்சியமைத்த ஜே. ஆர். ஜெயவர்த்தன, பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியுமானார்.

இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் இக்காலம் நிச்சயமாக தனித்த வரலாறு உடையது. இந்நாட்டில் தொடர்கின்ற இனப் பிரச்னையில், அதன் உச்சக்கட்ட விவாதப் போர்க்களமாக இப்பாராளுமன்றம் விளங்கியது. தமிழர்களின் மிதவாத அரசியல் - தீவிரவாத அரசியலுக்கு மாறத் தலைப்பட்ட காலம் இது.

அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் இவ்விவாதக் களத்தில் சமரிட்ட தளபதிகள் சளைத்தவர்களல்லர். பலர் சட்ட அறிஞர்கள். ஜே. ஆர். தரப்பில் லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்க போன்றவர்கள் இருந்தார்கள். சிறில் மத்தியூ போன்றவர்களும் இருந்தார்கள்.

அமிர்தலிங்கத்துக்கு சிவசிதம்பரத்துடன் உடன் இருந்தவர் ஆர். சம்பந்தன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரட்டைக் குழல் பீரங்கி என்று அமிர்தலிங்கத்தையும் சிவசிதம்பரத்தையும் குறிப்பிட்டுக் கூறும் அத்துலத்முதலி, சம்பந்தனை அடுத்த பீரங்கி என்பார்.

திருகோணமலையில், சர்ச்சைகளுக்கிடையேதான் அமிர்தலிங்கம் 1977 தேர்தலில் சம்பந்தனை பாராளுமன்ற அரசியலுக்குள் கொணர்ந்தார். அப்போது, சம்பந்தனின் பாராளுமன்ற ஆற்றுகையில் அந்த சர்ச்சைகள் அமைதியுற்றன.

அமிர்தலிங்கத்தின் இராஜதந்திர தூதுக்குழுவில் சம்பந்தன் நிலையான இடம்பெற்றார். இது, சம்பந்தன் பெற்ற அரசியல் சொத்து. தான் பெற்ற அந்த சொத்தை அமிர்தலிங்கத்துக்குப் பின்னர் சம்பந்தன் என்ன செய்தார் என்பதே, இப்போது சம்பந்தனை சீர்தூக்கிப் பார்க்கும் கோல்.

சம்பந்தனிடம் ஓர் ஆளுமை இருந்தது. ஆனால், அறன் இருக்கவில்லை.

நேர்மையை சுயநலம் விஞ்சியது. அது ஓர் இனத்தின் தலைவிதி ஆகியது.

தன்னுடைய பெயரை வரலாற்றில் பதிக்கும் ஆசை இருந்தது. அணுகுமுறைகள் அதற்கு வழி சமைக்கவில்லை.

எப்படியெனினும், ஒரு காலப் பகுதியில் ஈழத் தமிழினத்தின் முகமாக சர்வதேச அரங்கிலும் வடிவம் பெற்ற ஒரு தலைவர் இரா. சம்பந்தன்."

மாலியின் வரிகளில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பீரங்கியாக ஒரு காலத்தில் பாராளுமன்றத்தில் முழங்கிய சம்பந்தனுக்கு நேற்று பாராளுமன்றத்தில் அஞ்சலி செய்தார்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

அதேவேளை, நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டை கொண்டிருந்தார். அதற்காக போதுமான பங்கை செய்துள்ளார். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்கு செய்யக்கூடிய மிக உயர்ந்த அஞ்சலியாக இருக்கும்" என்று தெரிவித்திருந்தார்.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் சம்பந்தன் கொண்டிருந்த தனித்துவமான நிலைப்பாடு என்ன என்பதை ரணில் அறியாதவர் அல்லர். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாறி, புதிய அரசியலமைப்பை தயாரித்துக் கொண்டிருந்தபோது, அடுத்த தீபாவளிக்கு முடித்துவிடலாம் - பொங்கலுக்கு முடித்துவிடலாம் என்று சம்பந்தன் ஐயா கூறிக்கொண்டிருந்தபோது, ஊடகங்களும் - சமூகவலைத்தளங்களிலும் அவரைக் கேலி செய்து கொண்டிருந்தனர். அப்போது ஒரு தடவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் அதுபற்றி கேட்டபோது அவர் சொன்ன பதில்தான் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது. அந்த அரசியலமைப்பு தயாரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த பல்வேறு குழுக்களில் ஒரு குழுவுக்கு சித்தார்த்தன் தலைமை தாங்கிக்கொண்டும் இருந்தார்.

அவர் சொன்னார்: "உது சரி வரும் எண்டு நான் துளிகூட நம்பவில்லை. ஆனால், சாம் அண்ணர் (சம்பந்தனைத்தான் அவர் அப்படி குறிப்பிட்டார்) நம்புகின்றார். அவர் நம்புகிறபடியால் நாங்கள் அதை குழப்பிறமாதிரி எதுவும் செய்யக்கூடாது"

இதனை இப்போது ஞாபகப்படுத்துவதற்கு காரணம், ரணில் சொன்னதுபோல அதிகாரப் பகிர்வில் சம்பந்தன் கொண்டிருந்த தனித்துவமான நிலைப்பாடு, உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி கட்டமைப்புத்தான் என்பது அவர் அறியாததல்ல.

ஆனால், சம்பந்தன் அது எப்போதோ முடிந்துபோன ஒன்று, என்று சொன்ன பதின்மூன்றைக் கூட முழுமையாக அல்லாமல் பொலிஸ் அதிகாரம் இல்லாமலேயே தரமுடியும் என்று சொல்வதும் அதனைக்கூட, நிறைவேற்றுவதற்கு தேர்தலுக்காக தயக்கம் காட்டுவதும் சம்பந்தருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி அல்ல என்பதையும் அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

**ஊர்க்குருவி.**

# இரு வெதுப்பகங்களுக்கு 160,000 ரூபாய் அபராதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

கொக்குவிலில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு வெதுப்பகங்களுக்கு ஒரு இலட்சத்து 60ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நடந்த வழக்கு விசாரணையில் இரு வெதுப்பகங்களின் உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து, இருவருக்கும் தலா 80 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

முன்னதாக, நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கொக்குவிலில் கடந்த மாதம் 12ஆம் திகதி சோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது இரு வெதுப்பகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த மாதம் 24ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் ஒரு வெதுப்பகத்தை திருத்தவேலைகள் முடியும்வரை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிடப்பட்டது. மற்றைய வெதுப்பகம் திருத்தப் பணிகளை செய்து தொடர்ந்து இயங்க அனுமதித்து வழக்கு நேற்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இரு வெதுப்பகங்களும் திருத்தப் பணிகளை முழுமை செய்துள்ளன என்பதை பொது சுகாதார பரிசோதகர் உறுதிப்படுத்தினார்.

இதையடுத்து, இரு வெதுப்பக உரிமையாளர்களுக்கும் தலா 80 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது நீதிமன்றம்.

(ஐ)

# வடக்கின் நிர்வாக அதிகாரிகளாக புதியவர்கள் மூவர் நேற்று நியமனம்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

வடக்கு மாகாணத்தில் இரண்டு திணைக்களங்களின் ஆணையாளர் பதவிக்கும் மாகாண பிரதி பிரதம செயலாளர் பதவிக்கும் புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமன கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் நேற்று புதன்கிழமை வழங்கி வைத்தார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி சி. சுஜீவா, வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளராக திருமதி கு.காஞ்சனா, வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) திருமதி. அ. யோ. எழிலரசியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு பதில் அரச அதிபர்கள் நியமனம்!

யாழ்ப்பாணம், ஜூலை 04



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பதில் அரச அதிபர்கள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் நேற்று நியமிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட கடமை நிறைவேற்று அரச அதிபர்களாக இருந்த ம. பிரதீபன், எஸ்.முரளிதரன் ஆகியோரை பதில் அரச அதிபர்களாக நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இந்தநிலையில், நேற்றைய தினம் அவர்களுக்கான நியமனக் கடிதங்களை பிரதமர் தினேஷ் குணவர்த்தன பொது நிர்வாக சேவைகள் அமைச்சில் வைத்து வழங்கினார்.

இருவரும் இன்றைய தினம் மாவட்ட செயலகங்களில் தமது கடமையை பொறுப்பேற்பர்.

(ஐ)

# சம்பந்தனுக்கு நாளை அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 04

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கான அஞ்சலி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமை பணிமனையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மலர் அஞ்சலி செலுத்த அனைவரையும் பங்கேற்குமாறு யாழ். மாவட்டக் கிளை அழைத்துள்ளது.

(ஐ)

# திருவாசகம் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 04

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

12ஆவது தொடராக நடக்கும் இந்த சொற்பொழிவு பன்னாலை சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற் பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "மாணிக்கவாசகரும் திருச்சாழலும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

(ஐ)

# மானிப்பாய் இந்து பரிசளிப்பு விழா!

யாழ்ப்பாணம், ஜூலை 04

மானிப்பாய் இந்துக் கல்லூரி நிறுவுநர் தினம் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் முத்துவேற்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் செல்லையா இளங்கோ தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினராக சம்மாந்துறை ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் நித்தியானந்தக் குருக்கள் விஜயநாத சர்மா ஆகியோர் பங்கேற்பர்.

நினைவுப் பேருரையை ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி இராஜேந்திரா வசந்த சேனன் ஆற்றுவார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
04.07.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆனி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் வெற்றிடங்கள்...!

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் காலமானதைத் தொடர்ந்து அவரின் இடத்தை நிரப்பப் போவது யார் என்னும் கேள்வி எழுகின்றது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இல்லாது போனால் அவரின் இடத்துக்கு இரண்டாவது அதிக விருப்பு வாக்குகளை பெற்றவர் நியமிக்கப்படுவார்.

இது ஒரு பாராளுமன்ற வெற்றிடத்தை நிரப்பும் சாதாரண விடயம். ஆனால், அரசியலில் செல்வாக்கு செலுத்திய ஒருவர் காலமாகும்போது. அவரின் இடத்தை இன்னொருவர் சாதாரணமாக நிரப்பிவிட முடியாது. இரா.சம்பந்தன் திருகோணமலை தமிழர் அரசியலில் மூன்று தாசாப்தங்களாக செல்வாக்குச் செலுத்தியவர். குறிப்பாக, 2009இற்கு பின்னரான தமிழர் அரசியலை தீர்மானித்த ஒருவர். ஆனால், அவரால் ஒரு தனித்துவமான அரசியல் மரபை உருவாக்குவதில் வெற்றி காண முடியவில்லை. இந்த இடத்தில் அவரின் இடத்தை நிரப்பக்கூடியவர் யார் என்னும் கேள்வி எந்தளவு பொருத்தமானது என்னும் கேள்வியுண்டு.

சம்பந்தன் ஒரு சட்டத்தரணி. ஆங்கிலத்தில் விடயங்களை முன்வைப்பதில் கெட்டித்தனமானவர். இப்படியான தகுதியுள்ள ஒருவரால் அவரின் இடத்தை நிரப்ப முடியுமல்லாவா என்னும் கேள்வியை ஒருவர் முன்வைக்கலாம். அப்படி நோக்கும்போது, எம். ஏ. சுமந்திரன்தானே பொருத்தமானவர் என்னும் பதிலையும் சிலர் முன்வைக்கலாம்.

இங்கு விடயம் சட்டப்புலமையோ, ஆங்கிலமோ அல்ல. மாறாக, எவ்வாறானதோர் அரசியல் பாதையை ஒருவர் தமிழ் மக்களுக்கு விட்டுச் செல்கின்றார் என்பதுதான். ஒருவர் விட்டுச் செல்லும் இடத்திலிருந்துதான் அதனை இன்னொருவர் தொடர முடியும். ஆனால், தமிழ்த் தேசிய அரசியலில் செல்வாக்கு செலுத்தியவர்கள் என்று நோக்கப்படும் அனைவருமே அரசியலில் பேருந்தை தவறவிட்டவர்கள்தான். இவ்வாறு பேருந்தை தவற விடுபவர்களின் இடத்தை எதற்காக இன்னொருவர் நிரப்ப வேண்டும். எனவே, அரசியலில் வெற்றிடங்கள் என்பது சரியானதொரு பார்வைதானா?

அரசியலில் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்பது முக்கியமல்ல. மாறாக, அரசியலை சரியானவர்கள் - ஆற்றலுள்ளவர்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப விடயங்களை வெற்றிகரமாக முன்னெடுக்கக் கூடியவர்களே அரசியலை வழிநடத்த வேண்டும். அவ்வாறானவர்களாலேயே வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

கடந்த எழுபத்தைந்து வருடங்களில் பலர் வந்து சென்றிருக்கின்றனர். அவ்வாறானவர்களில் பலர் தங்களின் ஆளுமைகளால் தமிழர் அரசியலை புரட்டிப்போடக் கூடியவர்களென்றே நம்பப்பட்டது. ஆனால், அவர்களின் ஆளுமையால் இதுவரை தமிழர் அரசியலில் ஒரு சிறிய அடைவைக்கூட அடைய முடியவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாகக் கிடைக்கப்பெற்ற, அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தோற்றுப்போனவர்களின் அரசியல் வெற்றிடங்களை நிரப்புவதில் என்ன பயனுண்டு?

வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் - எவ்வாறானவர்களால் என்றால், காலமானவரின் தோல்விகளை சரிசெய்யும் ஆற்றலுள்ளவர்களால் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பண்பாட்டு விழா சிறப்புற நடந்தது

*கிளிநொச்சி, ஜூலை 04*

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார திணைக்களத்தின் அனுசரணையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழா பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கலை, கலாசார நிகழ்வுகளுடன் வீதியிலிருந்து பாடசாலை வரை ஊர்வலமாக கலைஞர்கள் வரவேற்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்களையும் உள்ளடக்கியவாறு பண்பாட்டு பெருவிழா நடைபெற்றது. இதன்போது, கவிதை, பேச்சு, புத்தாக்க நடனம் உள்ளிட்ட பல்வேறு ஆற்றுகை நிகழ்வுகள் அரங்கேறின.

தொடர்ந்து பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் இ. த. ஜெயசீலனின் "கைமாறு" எனும் கவிதை வாசிக்கப்பட்டது.



நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மிருதங்கம், புல்லாங்குழல், வயலின், இசை, நாடகம், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு கலைத் துறைகளை சார்ந்த கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், கௌரவ விருந்தினர்களாக பழைய மத்திய கல்லூரியின் அதிபர் குமாரசாமி ரவீந்திரா, அண்ணாவியார் கந்தையா ஆறுமுகம் மற்றும் பிரதேச சபை செயலாளர் பாடசாலை ஆசிரியர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எழுத்தாளர்கள் கவிஞர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(ஐ-01)

## சுக்கிர வார சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜூலை 04*

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச. நவநீதன் "சிவமாக்கி எனை யாண்ட அத்தன்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# சாரதா கல்விக்கூடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது!



*மன்னார், ஜூலை 04*

சாரதா கல்விக்கூடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா மன்னார் - இலுப்பைக்கடவையில் நேற்று முன்தினம் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

பிரான்ஸை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ரி. ரி. ஈசிகோ பௌண்டேசனின் கீழ் இயங்கும் சாரதா கல்விக்கூடம் இலுப்பைக் கடவை மாணவர்களின் நலனுக்காக பல தொடர்ச்சியான கல்விசார் உதவிகளை செய்து வருகின்றது.


இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயத்தில் இலவச மாலைநேரக் கற்கையை சாரதா கல்விக்கூடம் நடத்தி வந்தது. இந்த நிலையில், அது தனது புதிய கல்விக்கூடத்தை இலுப்பைக்கடவை - குண்டுக்கமம் பகுதியில் நிறுவவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வே நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதேவேளை, தற்காலிக கல்வி செயல்பாட்டு கட்டடம், பணிமனை திறப்பு விழாவும் நேற்று இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 04 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 20
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்கள் உழைப் பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங்க ளுக்கும் கேலி பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தி யோகத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை யால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதா யம் தரும் நாள்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடு வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற் றுக் கொள்வீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக் கைகள் நிறைவேறும். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர் கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற் றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப் படும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் அடை வீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். உத்தி யோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான காரியங்க ளையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்கா தீர்கள். சில இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியி ருக்கும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களில் அரவணைப்பு அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதை கூடும். திறமைகள் தேவைப்படும் நாள்.

**தனுசு**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் இராஜதந்திரத்தால் லாபத்தை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தில் அதி காரிகள் முக்கியத்தும் தருவார்கள். திடீர் யோகம்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்று வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிபோனாலும் எதிர் பாராத ஒரு வேலைமுடியும். புது வேலை அமை யும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார் கள். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள் வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்து டன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சாதிக்கும் நாள்.

# "நீட்" எதிர்ப்பை தி. மு. க. தொடர்வதன் மர்மம் என்ன?

## அண்ணாமலை கேள்வி

சென்னை, ஜூலை 04

தி. மு. க. தனது நீட் எதிர்ப்பு நாடகத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பதன் மர்மம் என்ன? - என்று பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

"நீட் விலக்கு என்று நாடக மாடிய தி. மு. க., ஆட்சிக்கு வந்ததும் அதன் ஒரு பகுதியாக, முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி, ஏ.கே. ராஜன் தலைமையில் ஒரு குழு அமைத்தது. இந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையில் உள்ள குளறுபடிகளை தமிழக பா. ஜ. க. பலமுறை சுட்டிக் காட்டியுள்ளது.

நீட் பரீட்சை வந்த பிறகு, அரசு மருத்துவக் கல்லூரிகளில், கிராமப்புற, அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க, மத்திய பா. ஜ. க. அரசின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்வு காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆனால், நீட் தேர்வு வருவதற்கு முன்பு, அரசு மருத்துவக் கல்லூரிகளில், அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்க்கை விவரங்களை, பலமுறை வலியுறுத்தியும், திமுக அரசு அமைத்த இந்தக் குழு வழங்க மறுப்பது ஏன்? முழுமையான விவரங்கள் இல்லாத ஓர் அறிக்கையை வைத்து,



தி. மு. க. தனது நீட் எதிர்ப்பு நாடகத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பதன் மர்மம் என்ன? - என்று தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

நீட் பரீட்சை முறைமையை இரத்து செய்ய வலியுறுத்தி பா. ஜ. க. அரசை வலியுறுத்தி தி. மு. க. மாணவர் அணி போராட்டம் நடத்திய நிலையிலேயு அண்ணாமலை மேற்கண்ட பதிவை இட்டுள்ளார். (ஐ)

# போதைப்பொருள் கடத்தல் மையமாக சிறைகள் மாறியமை அதிர்ச்சி தருகிறது

## அ. தி. மு. க. பொதுச் செயலர் பழனிசாமி

சென்னை, ஜூலை 04

போதைப்பொருள் கடத்தலுக்கு துறைமுகங்கள், கொரிய சேவை போன்றவற்றை பயன்படுத்தி வந்த கடத்தல் பெரும் புள்ளிகள் தற்போது உச்சகட்டமாக சிறைச்சாலையையே போதைப்பொருள் கடத்தல் கேந்திரமாக பயன்படுத்தியமையை சமூக பொறுப்புள்ள எவராலும் ஏற்க முடியாது என அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"தி. மு. க. ஆட்சியில் கடந்த மூன்றாண்டுகளாக பல்வேறு வடிவங்களில் போதைப்பொருள் விற்பனை நடைபெற்று வந்த நிலையில், ஊடகங்களில் வந்த செய்தி தமிழக மக்களின் மனதைப் பதற வைத்திருக்கிறது. தமிழகத்தில் போதைப்



பொருட்கள் விற்பவர்களைக் கைது செய்து, அவர்களை திருத்தும் இடமாகத் திகழ்ந்த தமிழக சிறைச்சாலைகள் தற்போது பாதுகாப்பாக போதைப் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளும் இடமாக மாறிவிட்டதா? என்ற சந்தேகம் மக்கள் மனதில் எழுந்துள்ளது.

தி. மு. க. ஆட்சியில் காவல் துறை தி. மு. கவின் ஏவல்துறையாக மாறி தவறிழைக்கும் ஆளும் கட்சியின் நிர்வாகிகள் மீதும், அவர்களது ஆதரவு பெற்ற குற்றவாளிகள் மீதும் நடவடிக்கை எடுப்பதில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்

உளவுத்துறை, சட்டம்-ஒழுங்கு மற்றும் மதுவிலக்கு பிரிவுகளுடன் தற்போது சிறைத்துறையும் இணைந்துவிட்டதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆளும் கட்சி நிர்வாகிகள் மற்றும் அவரின் ஆதரவுடன் செயல்படுபவர்களே இது போன்ற செயல்களில் ஈடுபடுவதாக செய்திகள் தெரிய வருவதால், கையறு நிலையில் உள்ள பொம்மை முதலமைச்சர் கட்டுப்பாட்டில் உள்ள காவல் துறை நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டார்கள்.

இந்தப் பிரச்னையில் உண்மையான அக்கறையுடன் மத்திய அரச தலையிட்டு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக மக்களின் நலன் கருதி வலியுறுத்துகிறேன்" - என்றுள்ளது. (ஐ)

# நீட் பரீட்சை தேவையற்றது

## தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்

சென்னை, ஜூலை 04

"நீட் பரீட்சையால் ஏழை, கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தப் பரீட்சை மாநில அரசுகளின் உரிமைகளுக்கு எதிரானது. நீட் பரீட்சை தேவையில்லை என்பதுதான் எனது கருத்து" என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 2ஆவது ஆண்டாக மாணவர்களுக்கு கல்வி விருது வழங்கும் விழா நேற்று நடந்தது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீட் பரீட்சையில் நான் மூன்று முக்கிய பிரச்னைகளைக் காண்கிறேன். முதலாவதாக நீட் தேர்வு மாநில உரிமைகளுக்கு எதிரானதாக இருக்கிறது. கல்வி என்பது முன்பு மாநில பட்டியலில் இருந்தது. அதை எப்பொழுது ஒன்றிய அரசு பொதுப் பட்டியலுக்குக் கொண்டு வந்ததோ அப்போதுதான் இந்த சிக்கல் ஏற்பட்டது.

ஒரே நாடு, ஒரே பாடத்திட்டம், ஒரே தேர்வு என்பதை அடிப்படையில் கல்வி கற்றலுக்கே எதிரான விஷயமாக நான் பார்க்கிறேன். ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஏற்றவாறு பாடத்திட்டம் இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, நீட் பரீட்சை குளறுபடிகள் பற்றி நாம் நிறைய செய்திகளை வாசித்தோம். அதன்மூலம் நீட் பரீட்சை மீதான நம்பகத்தன்மையே மக்களுக்கு போய்விட்டது. நீட் பரீட்சை தேவையில்லை என்பதுதான் ஊடகச் செய்திகள் மூலமாக நாம் புரிந்து கொண்ட விஷயமாக உள்ளது.

இந்தப் பிரச்னைகளுக்கு எல்லாம் தீர்வு நீட் விலக்கு மட்டுமே. நீட் தேர்வை இரத்து செய்யக் கோரி தமிழக அரசு கொண்டு வந்த சட்டப்பேரவை தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஒன்றிய அரசு இதன் மீது காலதாமதம் செய்யாமல் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால சந்ததியினருக்காக ஆசிரியர் பணியில் இணையும் அனைவரும் சேவையை அர்ப்பணிப்புடன் செய்யவேண்டும்!

## ஒழுக்கம் இல்லாமல் நாட்டின் கல்வியை முன்னெடுத்து செல்லமுடியாது
## 2,159 பேருக்கு புதிய ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 04

**ஆசிரியர் பணியில் இணைந்துகொள்ளும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தமது சேவைகளை அர்ப்பணிக்க வேண்டுமெனவும், ஒழுக்கமின்றி ஒரு நாட்டில் கல்வியைப் பேண முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க வலியுறுத்தினார்.**

முற்பகல் 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது என்று கூறிய ஜனாதிபதி, இது தொடர்பில் தேவையான மேலதிக நடவடிக்கைகளை ஆராயுமாறு சட்டமா அதிபருக்கு தான் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிள்ளைகளின் கல்வியில் சகலரும் கவனம் செலுத்துமாறும் நாசகார செயல்களுக்கு ஆதரவளிக்கவேண்டாம் எனவும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் இணையவழி முறையில் ஆசிரியர் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடியதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பதவி உயர்வு அல்லது ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் எவருக்கும் அநீதி இழைக்க இடமளிக்கப்படமாட்டாது எனவும் வலியுறுத்தினார்.

அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 60 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன் 1,706 பட்டதாரிகளுக்கும் 453 ஆங்கில டிப்ளோமா பெற்றவர்களுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாளமாக சில நியமனங்களை வழங்கி வைத்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் மேலும் கூறியதாவது:

நம் எதிர்காலம் நம் குழந்தைகள் தான். அதனால்தான், மாறிவரும் உலகில் புதிய அறிவு மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவுடன் எதிர்கால சந்ததியினரைப் பலப்படுத்த அரசு செயல்பட்டு வருகிறது. அது நம் அனைவரின் பொறுப்பாகும்.

எனவே, கௌரவமான தொழிலில் ஈடுபடும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தங்கள் சேவையை அர்ப்பணிக்க வேண்டும். ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். ஒழுக்கம் இல்லாமல் ஒரு நாட்டில் கல்வியைப் பேண முடியாது. உங்கள் வகுப்பறையில் 40 - 50 மாணவர்கள் இருக்கலாம். ஆனால் ஆசிரியருக்கும் இராணுவ அதிகாரிக்கும் வித்தியாசம் உண்டு. இராணுவ அதிகாரிகளின் கீழ் பயிற்சி பெற்ற மூத்தவர்கள் உள்ளனர். ஆனால் உங்களிடம் 18 வயதுக்குட்பட்ட நபர்களே உள்ளனர். இதில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும். நாட்டின் கல்வியைப் பாதுகாக்காது, கல்வி முறையை சீர்குலைத்தால், நம் எதிர்கால சந்ததியை இழக்க நேரிடும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, நாம் வேகமாக முன்னேற வேண்டும். 85 பில்லியன் டொலர்களாக இருந்த நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடுத்த 20 - 25 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 350 பில்லியன் டொலர்களாக உயர்த்த முயற்சிக்க வேண்டும். இது நமது எதிர்கால சந்ததியினருக்காக செய்யப்பட வேண்டும்.

அதற்கிணங்க குழந்தைகளின் எதிர்காலத்தில் கவனம் செலுத்தி அதற்கு முன்னுரிமை கொடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும். ஆசிரிய சேவை என்பது மற்ற சேவைகளில் இருந்து வேறுபட்ட சேவை என்றே சொல்ல வேண்டும். அந்த கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

தற்பொழுது பாடசாலைகளின் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும். பாடசாலைகளில் நடக்கும் இந்த வேலை நிறுத்தங்கள் நல்லதல்ல. அப்படி வேலைநிறுத்தம் செய்வதற்கு எந்த காரணமும் இல்லை. 2022ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவொன்றை வழங்கினோம். நாட்டின் பொருளாதார சூழ்நிலையில், அதற்கு மேல் வழங்க முடியாது. அதன்பிறகு, சில தொழிற்சங்கங்கள் இதை மறுபரிசீலனை செய்து கூடுதலாக வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கோருவது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. அவர்களுக்கு இரண்டு சம்பள உயர்வு வழங்கினோம்.

அண்மையில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் வகுப்பறைக்கு வரவில்லை. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்களும் ஏனைய மக்களும் வந்து, கூச்சலிட்டு, ஜனாதிபதி அலுவலகத்திற்கு வர முயற்சி செய்தனர். வீதித் தடைகளை தள்ளி, கண்ணீர் புகைக்குண்டுக்கு மத்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது ஒரு புதிய நிகழ்வு அல்ல. ஆனால் கௌரவமான தொழிலுக்கு அது பொருந்தாது.

அன்று, ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, வரவுப் பதிவுகளில் கையெழுத்திடாமல் பிள்ளைகளுக்கு பாடம் நடத்தினார்கள். சில நாடுகளில் கருப்பு பட்டியுடன் கற்பிக்கின்றனர். ஆனால் அண்மையில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் முற்றிலும் மாறுபட்டது.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் இந்நிலை காணப்படவில்லை. பிள்ளைகளுக்கான கல்வி நடவடிக்கைகளை நடத்தினர். அத்துடன் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் உரிய முறையில் பேணப்பட்டது.

ஆனால் அனைத்து சிங்கள மொழிமூலப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. சாதாரண கிராமங்களைச் சேர்ந்த ஏழைப் பிள்ளைகள் இந்தப் பாடசாலைகளுக்கே செல்கின்றனர். இதுவா ஆசிரியர் பணியின் பொறுப்பு? என்று கேள்வி எழுப்ப விரும்புகிறேன். தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ளனர். நுவரெலியா போன்ற பிரதேசங்களில் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் நடைபெறாத போது தமிழ் மொழிப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தன. இவ்வாறான நிலை நாட்டில் ஏற்படக் கூடாது.

சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பாடசாலைக்கு வரக் கூடாது என மிரட்டல் விடுத்தனர். அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதேபோன்று அவர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள் என்று எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சாட்டுகின்றனர். இது ஒரு நல்ல நிலைமை இல்லை.

முற்பகல் 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை யாரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க முடியாது. இது தொடர்பான பரிந்துரையொன்றை வழங்குமாறு நான் சட்டமா அதிபரிடம் தெரிவித்தேன். பாடசாலையை மூடுவதன் மூலமோ, வேலை நிறுத்தம் செய்வதன் மூலமோ பிள்ளைகளின் கல்வியை யாரும் சீர்குலைக்க முடியாது. எதிர்கால சந்ததியினருக்காக நாம் அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

மேலும், ஆசிரியர் இடமாற்றல் முறையை கணினி மூலம் செய்யலாமா என்பது குறித்து அமைச்சரிடம் நேற்று கலந்துரையாடினேன். பதவி உயர்வு அல்லது ஆசிரியர்கள் தொடர்பில் யாருக்கும் அநீதி இழைக்க அனுமதிக்க முடியாது. அதே போன்று, இதற்குப் பின்னர் இவ்விடயம் தொடர்பில் கடுமையாக செயல்பட வேண்டியேற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிலருக்கு என் மீது கோபம் ஏற்படலாம். ஆனால் அதுதான் யதார்த்தம். நாம் நமது பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்-என்றார்.

(அ)

# கதிர்காம யாத்திரைக்கு இராணுவத்தினர் உதவி!

கொழும்பு, ஜூலை 08

வருடாந்த கதிர்காம யாத்திரை நேற்று முன் தினம் குமண தேசிய வனப் பூங்காவின் ஒகந்த தேவாலயத்துக்கு அருகில் ஆரம்பமானது.

இந்த பாதயாத்திரை குமண யால தேசிய வனப் பூங்கா ஊடாக சுமார் 79 கிலோமீற்றர் பயணித்து கதிர்காமம் ஆலயத்தைச் சென்றடைகின்றது.

வருடாந்தம் நடைபெறும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பெருமளவிலான பக்தர்கள் வருகை தருவதால் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இராணுவத் தளபதியின் பணிப்புரையின் பிரகாரம் பக்தர்களுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்க இராணுவத்தினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.



(அ)

# புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதா ஜே.வி.பி?

## விசாரணை கோருகிறார் நாமல்

கொழும்பு, ஜூலை 04

ஜே.வி.பியினர் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினர் என இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் கூறியுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

மொட்டு கட்சியின் களனி தொகுதி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாங்கள் இன்னும் போர் பற்றி கதைக்கின்றோம் என சிலர் கூறுகின்றனர். அவ்வாறு சொல்பவர்கள் போர் பற்றி தற்போது புத்தகமும் எழுதுகின்றனர்.

ரணசிங்க பிரேமதாச புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்பதை அறிவோம். ஆனால் மற்றுமொரு கட்சியும் (ஜே.வி.பி) வழங்கியது என பிள்ளையான் கூறியுள்ளார். அது பற்றியும் விசாரணை நடத்தப்படவேண்டும்.

புலிகளுக்கு ஆயுதம் வழங்குவதற்கு அந்த அரசியல் கட்சியிடம் துப்பாக்கிகள் இருந்தனவா? அவ்வாறு வழங்கி இருந்தால் அந்த கட்சியின் கொள்கை பற்றி நாட்டு மக்கள் அறிய வேண்டும்.

நாம் ஒரு வேலைத்திட்டத்துடன் பயணிக்கின்றோம். எனவே, மொட்டு கட்சியுடன் இணைந்து பயணியுங்கள். சிறந்த எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்புவோம்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவை கைவிட்டு மொட்டுடன் வாருங்கள்!

## ரணிலை அழைக்கிறார் சாகர

கொழும்பு, ஜூலை 04

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி பொதுஜன பெரமுன கட்சியில் அங்கம் வகிப்பாராயின் அவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது குறித்து பரிசீலிக்கலாம் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாங்கள் குறிப்பிட்ட ஒருவரை முன்வைக்கவில்லை. எந்த நேரத்திலும் சரியான நபரை முன்வைப்போம். எமது கட்சி மொட்டு சின்னத்தில் வேட்பாளரை முன்வைக்கும்.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவர் மொட்டு சின்னத்தில் முன்வைக்கப்படுவார். ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி எமது கட்சியின் உறுப்பினர் பதவியை பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நடந்தால் நாங்கள் பரிசீலிப்போம்-என்றார்.



(அ)

# சாதனை வருவாய் ஈட்டிய மதுவரித் திணைக்களம்!

கொழும்பு, ஜூலை 04

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை மதுவரி வருமானத்தின் மூலம் 105 பில்லியன் ரூபாவை ஈட்ட முடிந்துள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் தெரிவித்துள்ளது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 17 பில்லியன் ரூபா அதிகரிப்பு என மதுவரித் திணைக்களத்தின் ஆணையர் எம்.ஜே.குணசிறி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை, மதுவரித் திணைக்களம் திட்டமிட்டபடி 105 பில்லியன் ரூபாயை ஈட்டியுள்ளது.

கடந்த ஆண்டு இந்த நேரத்தில், நாங்கள் 88 பில்லியன் ரூபாவைக் ஈட்டியிருந்தோம். இதன்படி 17 பில்லியன் ரூபா வளர்ச்சியை எட்டியுள்ளோம்.

இந்த 6 மாதங்களுக்குள் 20 பில்லியன் வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம்.

இயற்கை அனர்த்தங்கள் காரணமாக, எமது பிரதான உற்பத்தியகங்களில் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

இதனால், சுமார் 3 பில்லியன் நஷ்டம் ஏற்பட்டது.

இல்லையெனில், திட்டமிட்டபடி 107 பில்லியன் இலக்கை நோக்கி அடைந்திருப்போம்.

அதன்படி, கடந்த ஆண்டை விட சுமார் 20 வீத வளர்ச்சியை எட்டியுள்ளோம். இது குறிப்பிடத்தக்க சாதனையாகும்-என்றார்.

(அ)

# கடற்கரையில் ஒதுங்கிய பெண் ஒருவரின் சடலம்!

கொழும்பு, ஜூலை 04

புத்தளம் - உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூனைப்பிட்டி கடற்கரையோரத்தில் பெண் ஒருவரின் சடலமொன்று கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கரையொதுங்கிய பகுதியில் ஆடு மேய்க்கச் சென்ற நபர் ஒருவர் கடற்கரையோரத்தில் இவ்வாறு சடலமொன்று கிடப்பதை அவதானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் உடனடியாக பிரதேச மக்களுடன் இணைந்து அந்த பகுதிக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஊடாக பொலிஸாருக்கு தகவலை வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த உடப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலமாக கரையொதுங்கிய பெண், 40 வயது முதல் 50 வயதுக்கும் இடைப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணின் சடலம் உருக்குலையாத நிலையில் ஆடை எதுவுமின்றி காணப்படுவதாகவும் பொலிஸார் கூறினர்.

அந்த பெண் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவராக இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஏ.எம். வசீம் ராஜா, சடலத்தை பார்வையிட்டு நீதிவான் விசாரணையை அடுத்து, சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ)

# மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கொள்வனவு கட்டணம் திருத்தம்

கொழும்பு, ஜூலை 04

உத்தரவாத மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கொள்வனவுக் கட்டணத்தைத் திருத்தம் செய்தற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழும் குறித்த சட்டத்தில் பின்னர் மேற்கொள்ளப் பட்டுள்ள திருத்தங்களுக்கமைய, 10 மெகாவாற்று அல்லது அதற்குக் குறைவான கொள்ளளவு கொண்ட மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டங்களுக்குரிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட, உத்தரவாதமளிக்கப்பட்ட சந்தை விலையை விடவும் உயர்ந்த விலைக் கட்டண முறையின் கீழ் உத்தரவாத மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதற்கமைய, மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கொள்வனவின்போது மாறுபடுகின்ற கட்டண முறையை நடைமுறைப்படுத்துவதற்காக 2023.03.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், அபிவிருத்தியாளர்கள் ஒரு சிலர் மாத்திரம் அதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

அதனால், மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கட்டணத்தைக் கணிப்பீடு செய்வதற்கு விதந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, இலங்கை மின்சார சபை, இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைக் கணிப்பீடு சமன்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கும், உத்தேசக் கட்டணத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அ)

# போலி தங்க நகைகள் மூலம் 19.6 மில்லியன் ரூபா மோசடி!

கொழும்பு, ஜூலை 04

போலி தங்க நகைகளை பயன்படுத்தி 19,670,000 ரூபாவை மோசடி செய்த நபரை பதுளை பொலிஸ் பிரிவின் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பதுளையில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் தங்க நகைகளை அடகு வைக்கும் பிரிவின் அதிகாரி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த தனியார் நிதி நிறுவன உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணையின்போது சந்தேகநபரிடம் இருந்து 41 போலி நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த நிதி நிறுவனத்திற்கு பல்வேறு நபர்கள் வந்து நகைகளை அடகு வைத்த போது சந்தேக நபர் அவர்களிடம் போலியான ஆவணங்களை வழங்கியுள்ளார்.

அதன்பின் அந்த நகைகளுக்கு சமமான போலி நகைகளை இணையம் மூலம் இறக்குமதி செய்து அதனை குறிப்பிட்ட நகையின் பைகளில் இட்டு உண்மையான நகைகளை அடகு வைத்து பணம் பெற்றுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அடகு வைக்கப்பட்ட நகைகள் தொடர்பான வட்டியை சந்தேகநபர் அதன் உரிமையாளர்களின் பெயரில் செலுத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

(அ)

# பியூமி ஹன்சமாலியின் அழகுசாதன பொருள் விற்பனை நிலையம் தொடர்பில் விசாரணை!

கொழும்பு, ஜூலை 04

சூட்சுமமான குற்றச் செயல்கள் மூலம் சொத்துக்களை சம்பாதித்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நடிகையும், மொடலுமான பியூமி ஹன்சமாலிக்கு சொந்தமான அழகுசாதன பொருட்கள் அவரது நிறுவனத்தின் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துகள் தொடர்பான புலனாய்வு பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.

பியூமி ஹன்சமாலிக்கு சொந்தமான அழகுசாதன பொருட்கள் தயாரிக்கப்படும் இடங்கள் தொடர்பான தகவல்கள் தொடர்பிலும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், பியூமி ஹன்சமாலியினால் நடத்தப்பட்டு வரும் வியாபாரங்களின் வருமான வரி செலுத்துதல் மற்றும் கணக்கு வழக்குகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(அ)

# உள்நாட்டு இறைவரித் திணைக்கள தொழிற்சங்க நடவடிக்கை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 04

நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தாம் தலையிட்டு தீர்வு காண்பதாக வழங்கப்பட்ட எழுத்துமூல வாக்குறுதி காரணமாக இன்றும் நாளையும் அமுல்படுத்தப்படவிருந்த தொழில் சங்க நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி மற்றும் கலால் திணைக்கள தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. உள்ளக தொழிற்சங்கங்களுடன் தமது அமைப்புக்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் நிதியமைச்சில் அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தலைமையில் இடம்பெற்றதுடன், இது தொடர்பான எழுத்துமூல வாக்குறுதியும் இந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா.சம்பந்தன் ஆற்றியுள்ள தொண்டு பாராட்டத்தக்கது!

## அதை யாரும் மறுக்க முடியாது என்கிறார் வீ.ஆனந்தசங்கரி

கிளிநொச்சி, ஜூலை 04

**இரா.சம்பந்தன் ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. அதை யாரும் மறுக்க முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் முன்னாள் பாராளுமன்ற) உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு வழங்கிய இரங்கல் செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்து அண்மையில் காலமான இரா.சம்பந்தன் பற்றி நான் கூறினால் அநேகர் ஆச்சரியத்துடன் பார்ப்பீர்கள்.

எனக்கும் சம்பந்தனுக்கும் கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் உறவு இருந்தது. ஒன்றாக நாங்கள் வேலை செய்தோம். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில் அவரும் இணைந்து கொண்டார்.

தந்தை செல்வாவுக்கு பெரிதும் மதிப்பு கொடுத்து வந்தவர். தந்தை செல்வாவின் இலட்சியத்தில்தான் போராடுவேன் என்று கூறிவந்தார். இதை யாரும் மறுக்க முடியாது. நானும் அதை உறுதிப்படுத்துகிறேன்.

இந்த இனத்தின் நன்மை கருதி சம்பந்தன் பல விடயங்களை செய்தார்.

என்னைப் பொறுத்த வகையில் சம்பந்தன் நல்ல அரசியல்வாதி. நல்ல எழுத்தாளன். இவரது முயற்சியால் இனப்பிரச்னைகளை தீர்க்கக் கூடிய பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

எனக்கும் சம்பந்தனுக்கும் வயதில் 3 மாதமே வித்தியாசம். அவரது மரணச் செய்தி எனது கால முதிர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது.

எனவே இனியும் நாங்கள் ஏமாற முடியாது. அனைவரும் இணைந்து தமிழர் இனப் பிரச்னைக்கு முடிவு காணுவோம். இந்த நாட்டு மக்கள் அதற்கு தயாராக இருக்கின்றாகள்.

சம்பந்தன் எத்தனையோ தியாகங்கள் செய்து அவரது முயற்சி பலனற்று போனமை கவலை. மிக விரைவில் நான் உயிருடன் இருக்கும்வரை தந்தை செல்வாவின் கட்சியில் உங்கள் அனைவரினதும் ஆதரவுடன் பயணிப்போம். அந்த ஆவலான நாள் மிக விரைவில் வரும் என நம்புகிறேன்.

அவர் ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. அதை யாரும் மறுக்க முடியாது. சம்பந்தனின் அபிலாசைகள் நிறைவேறுவதற்கு வேறு சக்திகள் இடம் கொடுக்கவில்லை. அவர் பிரிவினால் துயருற்றுள்ளவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறேன்-என்றார். (அ)

# மோசடியில் ஈடுபட்ட சகோதரிகள் கைது!

கொழும்பு, ஜூலை 04

வெளிநாட்டில் வசித்து வரும் ஒருவருக்குச் சொந்தமான காணியை, ஆள் மாறாட்டம் செய்து உரிமை மாற்றம் செய்த சகோதரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார். அவர் தனது காணிக்கான அற்றோனித்தத்துவ அதிகாரத்தை தனது ஒன்றுவிட்ட சகோதரிக்கு வழங்கியிருந்தார்.

இந்த நிலையில், காணி உரிமையாளரின் சொந்தச் சகோதரி பிறிதொரு தேவையைக் காரணம் காட்டி ஒன்றுவிட்ட சகோதரியிடமிருந்து உறுதியைப் பெற்றுச்சென்று மோசடியாக உரிமை மாற்றம் செய்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், காணி மோசடி செய்த சகோதரியைக் கைது செய்தனர். அவர் ஆள்மாறாட்டம் செய்வதற்கு உதவிய பிறிதொரு பெண்ணும் கைதுசெய்யப்பட்டார்.

இவரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஆனந்தராஜாவின் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, 10 ஆயிரம் ரூபாவுக்காகவே தான் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டதாக ஆள்மாறாட்டம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பெண் ஒப்புக்கொண்டார். இதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆள்மாறாட்டத்துக்குத் துணைபோன பெண் (10 ஆயிரம் ரூபாவுக்காக கையொப்பம் வைத்தவர்) கொழும்பைச் சேர்ந்தவர் என்றும், சுன்னாகத்தில் தற்காலிகமாக வசித்தபோதே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்றும் கூறப்பட்டது.

சட்டத்தரணியின் முன்னிலையில் கையொப்பம் வைத்தபோது தான் நோய்வாய்ப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவர் மாஸ்க் அணிந்திருந்தார் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜூனில் பணவீக்கம் 1.7 வீதமாக உயர்வு!

கொழும்பு, ஜூலை 04

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மே மாதம் 0.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஜூன் மாதம் 1.7 வீதமாக உயர்வடைந்துள்ளது.

அதன்படி கடந்த மே மாதம் பூச்சியமாகப் பதிவான உணவுப் பணவீக்கம் ஜூனில் 1.4 வீதமாகவும், மே மாதம் 1.3 வீதமாகப் பதிவான உணவல்லாப்பணவீக்கம் ஜூனில் 1.8 சதவீதமாகவும் உயர்வடைந்தன.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் ஜூனில் 0.77 வீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருட்களின் விலைகள் மற்றும் உணவல்லாப் பொருட்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பு காரணமாக அமைந்துள்ளது.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த மே மாதத்தில் பதிவான 3.5 வீதத்திலிருந்து ஜூன் மாதத்தில் 4.4 வீதமாக உயர்வடைந்துள்ளது.

இது இவ்வாறிருக்க பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்டு, பணவீக்கமானது எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடைந்து, நடுத்தர காலத்தில் அம்மட்டத்துக்கு மேல் பதிவாகும் என மத்திய வங்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது. (அ)

# ஜப்பானிய அமைச்சருடன் அமைச்சர் அலி சப்ரி பேச்சு!

ரோக்கியோ, ஜூலை 04

ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவாவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான மனித வளப் பரிமாற்றத்தை மேலும் ஊக்குவிக்கும் என நம்புவதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் மறுசீரமைப்புக்கு தீர்வு காண்பதற்காக இலங்கை மேற்கொண்டுள்ள அண்மைக் கால முயற்சிகளுக்கு அவர் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் அலி சப்ரி தலைமை அமைச்சரவை செயலாளர், நீதி அமைச்சர் மற்றும் ஜப்பான் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரையும் இதன்போது சந்தித்துள்ளார்.

# இலங்கையிலுள்ள ஆசிரியர்களை உள்வாங்க மாலைதீவு விருப்பம்!

கொழும்பு, ஜூலை 04

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸூ இலங்கையிலிருந்து தகுதியான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாலைதீவிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மாலைதீவுக்கான இலங்கை தூதுவர் பெல்பொலகே ரங்க சுஜீவ குணவர்தன மொஹமட் முய்ஸுவிடம் நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளிக்கும்போதே மாலைதீவு ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையிடமிருந்து கல்வித் துறையில் கூடுதல் ஆதரவைப் பெற விருப்பம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மொஹமட் முய்ஸூ மற்றும் தூதுவர் மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் கல்வி மற்றும் சுகாதாரம் உட்பட இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் போன்ற விடயங்களை கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது மாலைதீவுக்கு தகுதியான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் குறிப்பிட்ட முக்கியத்துவம் அளித்து கல்வித் துறையில் கூடுதல் ஆதரவைப் பெறுவதற்கான தனது விருப்பத்தை மொஹமட் முய்ஸூ தெரிவித்துள்ளார். (அ)

# பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை; பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு அவதானம்

கொழும்பு, ஜூலை 04

பணியிடங்களில் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அரசசார் பற்ற நிறுவனங்கள் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். அதிகளவானவர்கள் பெண்களாக இருந்தாலும் நிறைவேற்றுத் துறை பதவிகளில் பெண்களில் அளவு வரையறுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன், ஆடைத் தொழிற்துறையிலுள்ள பெண்களின் பிள்ளைகளை பராமரிப்பதற்கு முறையான பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை அமைப்பதன் தேவையையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், வீட்டு வேலைகளில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பில் காணப்படும் சட்ட ரீதியான சிக்கல்கள் பற்றியும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியதுடன், இது தொடர்பில் குழுவின் கவனத்தை செலுத்தி தேவையான நடவடிக்கையை எடுப்பதற்குத் தலையிடுவதாக குழு தெரிவித்தது.

அத்துடன், பெண்களை தொழில் முயற்சியாளர்களாக வலுவூட்டுவது தொடர்பில் தமது அமைச்சு விசேட கவனம் செலுத்துவதாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு சுட்டிக்காட்டியது.

அதற்கு மேலதிகமாக, தொழிற்துறையுடன் செயற்கை நுண்ணறிவு இணைவதனால் பெண் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் தாக்கம் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய, இங்கு கலந்துரையாடப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் குழுவுக்கு அறிக்கை வழங்குமாறு வருகை தந்த பிரதிநிதிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி கோரிக்கை விடுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனாய்வு விசாரணைகளின்போது பொலிஸார் பொதுமக்களை சித்திரவதைக்குள்ளாக்கக்கூடாது

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் கருத்து

அம்பாறை, ஜூலை 04

குற்றவியல் சட்டப் புலனாய்வுகள் பொலிஸில் முறைப்பாடொன்றினைச் செய்வதன் மூலமோ அல்லது முறைப்பாடின்றியோ பொலிசார் ஆரம்பிக்கலாம். அம்மீறல்களை புலனாய்வு செய்வதன் நோக்கம் யார் யாருக்கு என்ன செய்தார் என்ற கேள்விக்கு இயன்றளவு விடையளிப்பதாகும். மீறல் சம்பவம் எத்தனை தடவைகள் இடம்பெற்றுள்ளதென்பதையும் ஒரு சம்பவத்தில் எத்தனை மீறல்கள் இடம்பெற்றுள்ளது என்பதையும் இனங்காண இந்த புலனாய்வுகள் உதவும். இப்புலனாய்வுகளின் போது சந்தேக நபருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கோ உள ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ தீங்கு ஏற்படாத வண்ணம் விசாரணைகள் செய்யப்படவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.



மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரவதையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தையொட்டி பொலிஸ் அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனித உரிமை மீறல் சம்பவம் என்பது ஆரம்பமும், முடிவும் உள்ள ஏதோவொரு நிகழ்வாகும். அது தனி நிகழ்வாக, தொடர் நிகழ்வாக. பலர் இணைந்து இடம்பெறும் கூட்டு நிகழ்வாக இருக்கலாம். இதனை பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்கின்றபோது துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு மேலும் மீறல்கள் ஏற்படாத வகையில் பொலிசார் செயற்படவேண்டியது அவர்களின் கடமையிலான பணியாகும். முறைப்பாடு செய்ய நிலையத்திற்கு வருபவர்களை அன்போடு ஆதரித்து வார்த்தைப் பிரயோகங்களை எவரது மனமும் புண்படாத வகையில் பாவிக்கவேண்டும். இது மனித கௌரவத்தை பாதுகாக்கும் என்பதால் சித்திரவதைக் கலாச்சாரம் இல்லா தொழிப்பதற்கு அனைவர்களும் முன் வந்து செயற்படவேண்டும்-என்றார்.

(அ)



# மோட்டார் சைக்கிள் மீட்பு

அம்பாறை, ஜூலை 04

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர் பகுதியில் இருந்து பஜாஜ் டிஸ்கவர் ரக, ஈ.பி.எக்ஸ்.ஜே 1724 என்ற இலக்கத்தகடு பொறிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று கைவிடப்பட்ட நிலையில் சம்மாந்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் வேறு பகுதியில் இருந்து ஏதேனும் குற்றச் செயலுக்கு கொண்டுவரப்பட்டதா அல்லது களவாடப்பட்டதா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# நாட்டின் 9ஆவது ஜனாதிபதியுடன் கதைத்து ஏமாறுவதற்குள் சம்பந்தன் இறந்துவிட்டார்!

## கூறுகிறார் அரியநேத்திரன்

மட்டக்களப்பு, ஜூலை 04


இலங்கையின் 09ஆவது ஜனாதிபதியுடனும் கதைத்து ஏமாறுவதற்கு முன்பாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் காலமாகிவிட்டதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு இணைந்த சமஷ்டி தீர்வு தரப்படவேண்டும் என்பதில் இலங்கையின் எட்டு ஜனாதிபதிகளுடன் பேசி நம்பி ஏமாந்த தலைவராகவே நாங்கள் சம்பந்தன் ஐயாவை பார்க்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

மறைந்த தமிழ் தேசிய பெருந்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் ஆத்ம சாந்தி வேண்டி, இலங்கை தமிழரசு கட்சியின் பட்டிப்பளை பிரதேச கிளையின் ஏற்பாட்டில் அம்பிளாந்துறை பகுதியில் நேற்று முன் தினம் மாலை அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன் மற்றும் ஞா.ஸ்ரீநேசன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டார கிளை தலைவர் செயலாளர், பொருளாளர், இளைஞர் அணி மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(அ)



# மாணவரின் எதிர்காலக் கல்வி தொடர்பான நடமாடும் சேவை

அம்பாறை, ஜூலை 04

பாடசாலை மாணவர்களின் எதிர்கால கல்வி மற்றும் இடைவிலகல் தொடர்பான நடமாடும் சேவை கல்முனை இஸ்லாமாபாத் பிரதேசத்தில் நடைபெற்றது.


இஸ்லாமாபாத் பிரதேசத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று பாடசாலை செல்லும் மாணவர்கள் தொடர்பாக தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் அவர்கள் கல்வியினை தொடர்வதில் உள்ள இடர்பாடுகளும் இதன் போது ஆராயப்பட்டன.

இந் நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி கள உத்தியோகத்தர்கள், உளவள உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், முறைசாரா கல்வி நடவடிக்கைக்கு பொறுப்பான உத்தியோகத்தர், மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# தொழில் வழிகாட்டல் ஆலோசனை கருத்தரங்கு





அம்பாறை, ஜூலை 04

பாடசாலையில் இருந்து இடைவிலக்கிய மாணவர்களை தொழில்நுட்ப கல்லூரி மற்றும் தொழில்பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கு அனுமதிப்பதற்காக கிராம மட்டத்தில் கடமையாற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தி மாணவர்களை இணைத்து கொள்வது சம்மந்தமான கருத்தரங்கு நேற்று சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கிணங்க திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.ஏ மௌலானா மற்றும் மனதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம் நிப்ராஸ் ஆகியோர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம வளவாளராக சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எஸ்.தியாகராஜா கலந்து கொண்டு உத்தியோகத்தர்களுக்கு தொழில்நுட்ப கல்லூரியின் செயற்பாடுகள் நன்மைகள் சம்மந்தமாக தெளிவுபடுத்தினார்.

மேலும் இந் நிகழ்வில் நிந்தவூர் தொழிற்பயிற்சி நிலையத்தின் திட்ட உதவியாளர் எம்.எம் மஹ்ஜூன், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் கமல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் நெரிசலில் சிக்கி 134 பேர் மரணம்!



புதுடில்லி, ஜூலை 04

**மத நிகழ்வு ஒன்றில் கூட்ட நெரிசலில் சிக்கி 134 பேர் உயிரிழந்தனர். இந்தியாவின் - உத்தரப் பிரதேசம் - ஹாத்ரஸ் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

இந்தியாவையே உலுக்கிய இந்தச் சம்பவத்துக்கு காரணமானவர் என்று கூறப்படும் போலே பாபா தலைமறைவாகியுள்ளார்.

சிறிய அளவிலான கூட்டம் என்று கூறி அனுமதி பெறப்பட்ட இந்தக் கூட்டத்தில் எந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. 12.5 இலட்சம் பக்தர்கள் கூடிய இந்தக் கூட்டத்தில் 48 பொலிஸார் மட்டுமே காவல் கடமையில் இருந்தனர்.

கூட்டம் நடந்த பந்தலில் போதுமான இடைவெளி இருக்கவில்லை. அதன் கொள்ளளவிலும் அதிகமானவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர். பாபாவிடம் ஆசி வாங்குவதற்கு முற்பட்டபோதே நெரிசல் ஏற்பட்டது. நெரிசல் ஏற்பட்ட சில நிமிடங்களிலேயே 100இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

ஆனால், போலே பாபாவோ பக்தர்களின் இறப்பை கண்டுகொள்ளாமல் தனது வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டார். சம்பவம் தொடர்பில் அறிந்த அவர் அங்கிருந்து தலைமறைவாகிவிட்டார் என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தில் 134 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் 126 பேர் அடையாளம் காணப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் பலர் இன்னமும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)



# பிரேசிலில் வெள்ளம் 179 பேர் உயிரிழப்பு!

பிரேசிலியா, ஜூலை 04


பிரேசிலில் தொடர்ந்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் 179 பேர் உயிரிழந்தனர். 33 பேர் காணாமல் போயுள்ளனர்.

பிரேசில் நாட்டில் கடந்த மே மாதம் முதல் பருவமழை பெய்து வருகிறது. இதனால், அந்த நாட்டின் தெற்கு மாகாணமான ரியோ கிராண்டி டு சுல் நகரில் கனமழையால் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் 179 பேர் உயிரிழந்தனர். 33 பேர் காணாமல் போயுள்ளனர். 20 இலட்சம் பேர் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

# ரஷ்யா - உக்ரைன் போரை ஒரேநாளில் நிறுத்துவேன்!

## டொனால்ட் ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூலை 04

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் ரஷ்யா - உக்ரைன் போரை ஒரே நாளில் நிறுத்திவிடுவேன் என்று டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஜனாதிபதி பைடனுடனான விவாதத்தில் பங்கேற்ற அவர், “நாம் புடினால் மதிக்கப்படும் ஓர் உண்மையான அமெரிக்க ஜனாதிபதியைக் கொண்டிருந்தால், அவர் ரஷ்யாவை உக்ரைனுடன் போர் செய்ய அனுமதித்திருக்க மாட்டார்” என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுகுறித்து நிருபர்களுடன் பேசிய ரஷ்ய பிரதிநிதி வாசிலி நெபென்சியா,

“உக்ரைன் பிரச்னையை ஒரே நாளில் ட்ரம்ப்பால் தீர்க்க முடியாது. கடந்த 2022 ஏப்ரலில் உக்ரைனின் மேற்குப் பகுதி ஆதரவாளர்கள் இரு நாடுகளுக்கிடையே தீர்மானமாகவிருந்த அமைதி ஒப்பந்தத்தைத் தடுத்து ரஷ்யாவுடன் போரிடுமாறு கூறினர். தற்போது ஜெலன்ஸ்கி அமைதி ஒப்பந்தம் எனும் பெயரில் நகைச்சுவை திட்டத்தைக் கொண்டு வருகிறார்' என்றார்.

# கென்யாவில் வன்முறை 39 பேர் உயிரிழந்தனர்!

நைரோபி, ஜூலை 04

ஆபிரிக்க நாடான கென்யாவில் புதிய வரி உயர்வை எதிர்த்து மக்கள் போராடி வருகின்றனர். இதில் வெடித்த வன்முறையில் 39 பேர் இதுவரை உயிரிழந்தனர். மேலும், 360இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனை கென்யாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உறுதி செய்துள்ளது.

ஜூன் 18 முதல் ஜூலை 1 வரை ஏற்பட்ட உயிரிழப்புகளே இவை. எனினும், உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகமாகும். 32 பேர் காணாமல் போயுள்ளனர். 620இற்கும் மேற்பட்டோர் அரசால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வரி உயர்வை எதிர்த்து கென்யாவில் மக்கள் போராட்டம் மேற்கொண்டுள்ளனர். இதில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள்.



இந்தச் சூழலில் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று அங்கு போராட்டம் வன்முறையாக மாறியது. பாராளுமன்றத்தில் வரி உயர்வு சார்ந்த சட்டம் நிறைவேற்றப்பட்டது அதற்கு காரணமாக அமைந்தது. இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டனர். அதன் போது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் சிலர் உயிரிழந்தனர்.

அந்த நாட்டின் ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ தலைமையிலான அரசுக்கு இந்த சூழலில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கடை உரிமையாளருக்கு சிறை

## மியன்மாரிலேயே இந்த விசித்திரம்

யங்கூன், ஜூலை

மியன்மாரில் பணவீக்கம் அதிகரித்திருக்கும் நிலையில், கடை ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுத்த உரிமையாளர் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மியன்மாரில் இராணுவ ஆட்சி நடக்கிறது. அங்கு பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், தனது கடை ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுத்த கடை உரிமையாளரான பியே பியோ ஸா என்பவரின் மூன்று கைபேசி விற்பனை நிலையங்களை மூடிய இணுவத்தினர் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

அவர் மட்டுமின்றி இதே குற்றச்சாட்டில் மேலும் 10 கடை உரிமையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பணவீக்கம் ஏற்பட்டிருக்கையில் ஊதிய உயர்வு வழங்குவது அமைதியைக் கெடுக்கும் என்று மியன்மார் இராணுவ அரசு தெரிவித்துள்ளது. மேலும், கைது செய்யப்பட்ட உரிமையாளரின் கடை வாசலில் 'நாட்டின் அமைதி மற்றும் சட்ட ஒழுங்கை சீர்குலைத்ததற்காக மூடப்பட்டது' என்று எழுதி ஒட்டியுள்ளனர். (ஐ)

# இம்ரான் கானை விடுதலை செய்க

## ஐ. நா. சபை கோரிக்கை



நியூயோர்க், ஜூலை 04

இம்ரான் கான் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தன்னிச்சையானது - சர்வதேச சட்டத்தை மீறுவதாக உள்ளது. எனவே, அவரை உடன் விடுதலை செய்ய வேண்டும் - ஐக்கிய நாடுகள் சபை பாகிஸ்தான் அரசாங்கத்தை கோரியுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பல்வேறு வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்க பாகிஸ்தான் அரசு மறுத்துவிட்டது. "இது உள்நாட்டு விவகாரம்", என்றும் அது கூறியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலை தாமதமாக்கும் எந்த முயற்சியையும் நிறுத்தவேண்டும்

## சரத் பொன்சேகா கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 04**

**ஜனாதிபதி தேர்தலை தாமதிப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.**



ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசியலமைப்பின் அடிப்படையில் விளக்கமளிக்கவேண்டும் என கோரும் மனுவொன்றை வர்த்தகர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். சி.டி.லெனாவ என்பவரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து நீதிமன்றம் தெளிவுபடுத்தவேண்டும் என தனது மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ள அவர் நீதிமன்றம் இந்த விளக்கத்தை வழங்கும்வரை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு இடைக்கால உத்தரவை பிறப்பிக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த செய்திக்கான தனது சமூக ஊடகப் பதிவில் சரத்பொன்சேகா தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

செப்ரெம்பர் 17 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 16ஆம் திகதிக்கும் இடையில் திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலை தாமதப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் பெருந்துன்பதுயரங்களை அனுபவிக்கின்றனர் என தெரிவித்துள்ள அவர், சரியான தலைவர் ஒருவரை தெரிவு செய்வதற்கான தங்களின் உரிமையை பறிப்பதே அவர்கள் இறுதியாக அனுபவிக்கக்கூடிய மோசமான விடயம் எனவும் கூறினார்.

ஜனநாயகத்தின் கொள்கைகளை அனைத்து சந்தர்ப்பத்திலும் பின்பற்றவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து இலங்கையர்களும் அனைத்து பேதங்களையும் கைவிட்டுவிட்டு இந்த அநீதிக்கு எதிராகஅணி திரளவேண்டும். வாக்களிப்பதற்கான எங்கள் உரிமைக்காக போராட முன்வரவேண்டும் எனவும் சரத் பொன்சேகா வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# 85 வீதமான சிறுமிகள் காதல் என்ற பெயரில் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகின்றனர்

கொழும்பு, ஜூலை 04

16 வயதுக்குட்பட்ட சிறுமிகளில் 85 வீதமானோர் காதல் என்ற பெயரில் பாலியல் துஷ்பிரயோகத்துக் குள்ளாகுவதாக பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.





இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரிவிக்குமாறும் அவர் கூறினார்.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்களுக்கு மாபெரும் பொறுப்பு உள்ளது. எனவே சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க முயற்சி எடுப்போம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# விபசார விடுதி சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜூலை 04

மொனராகலை பிரதேசத்தில் பிபில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுல்லகம்மன பகுதியில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

பிபில பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரும் மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கருவாட்டு கறியில் விழுந்த 9 வயதுச் சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 04

கொழும்பின் புறநகர் பகுதியான பாணந்துறை பகுதியில் இடம்பெற்ற பொசன் போயா தன்சலின்போது கருவாட்டு கறிக்குள் விழுந்த 9 வயமு சிறுமி நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி பாணந்துறை - பெக்கேகம பிரதேசத்தில் வசித்து வந்த ஷயானி மெதும்சா (வயது-09) எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொசன் போயாவை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி தனது தாயுடன் சாப்பாட்டு தன்சலுக்கு குறித்த சிறுமி தனது தாயுடன் சென்றுள்ளார்.

இந்நிலையில், அங்கு அடுப்பில் வெந்துகொண்டிருந்த கருவாட்டு கறிக்குள் சிறுமி விழுந்ததால் உடல் பொசுங்கி மிகவும் ஆபத்தான நிலையில் பாணந்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று குறித்த சிறுமி பரிதாபரமாக உயிரிழந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பில் 67ஆவது மாடியில் இருந்து விழுந்து மாணவர் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 04

கொழும்பு- கொம்பனித்தெருவில் உள்ள சொகுசு அடுக்கு மாடி குடியிருப்பின் 67ஆவது மாடியில் இருந்து கீழே விழுந்து 15 வயது மாணவனும் மாணவியும் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளவத்தை மற்றும் களனிப் பிரதேசத்தில் வசிக்கும் மாணவனும், மாணவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவனும் மாணவியும் கொழும்பில் உள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் ஒரே வகுப்பில் கல்வி பயின்று வந்துள்ளனர் எனவும், இருவரும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைக் கொம்பனித்தெரு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஒவ்வொரு வருடமும் தற்கொலையால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மரணம்

கொழும்பு, ஜூலை 04

ஒவ்வொரு வருடமும் தற்கொலைகளால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழக்கின்றனர்.

ஜூலை முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் தேசிய காயம் தடுப்பு வாரத்தின்போது இந்த புள்ளிவிவரம் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆபத்தான போக்கை எதிர்த்துப் போராடுவதற்கு, மேம்பட்ட மனநல ஆதரவு சேவைகள், சமூக விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் தற்கொலை தடுப்பு உத்திகள் ஆகியவற்றின் அவசரத் தேவையை வலியுறுத்தி, தற்கொலைகள் ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதார சவாலாக இருப்பதாக சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# 26 சுற்றுலா கவர்ச்சிகரமான கடற்கரை வலயங்கள் விரைவில் உருவாக்கப்படும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜூலை 04

இந்த ஆண்டில் அடையாளம் காணப்பட்ட 26 சுற்றுலா கவர்ச்சிகரமான கடற்கரை வலயங்கள் உருவாக்கப்படும். 26 கரையோர வலயங்களின் அபிவிருத்திக்கான அடிப்படை வடிவமைப்புகள் மற்றும் கட்டமைப்புத் திட்டங்கள் இந்த நாட்களில் தயாரிக்கப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்றன.

வனாத்தவில்லு ஆற்றின் வாடி, வனாத்தவில்லு களப்பு தீவு, கல்பிட்டி குடா, கல்பிட்டி வைகால, நீர்கொழும்பு தடாகம், நீர்கொழும்பு கபுங்கொட, வத்தளை பிரிதிபுர, பெந்தோட்ட கடற்கரை, ஹபராதுவ கொக்கல லகூன், திக்வெல்ல சீதா கால்ல, தங்கல்ல ரெகவ லகூன், அம்பலாங்கொடை லூனம் லகூன், ஹம்பாந்தோட்டை மலல லேயாவ, திஸ்ஸமஹாராம கிரிந்த வெலி மலை லாஹூகல குனுக்கல கடற்கரை, பொத்துவில் எலிபெண்ட் ரொக், மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு சல்லதீவு, கிண்ணியா தம்பலகமுவ குடா, திருகோணமலை ஆளுநரின் அலுவலகப் பகுதி, திருகோணமலை உப்புவெளி, திருகோணமலை சம்பல் தீவு, குச்சிவெளி அரிசிமலை முல்லைத்தீவு நாயாறு குடா, முல்லைத்தீவு நந்திக்கடல் குடா, யாழ்ப்பாணம் சென்னக்குளம் கடற்கரை, யாழ்ப்பாணம் கசூரினா கடற்கரை ஆகிய கரையோரப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.



கடலோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் தனியார் துறையுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வருடம் இரணைவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்தியவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி, உஸ்வெட்டகெய்யாவ ஆகிய கரையோரங்களில் 14 அவசரகால கரையோர பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அபிவிருத்திப் பணிகளுக்காக 520 மின் அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# பொலிஸாரின் மீது தாக்குதல் நடத்திய இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 03

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் திருகோணமலையைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய பஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இரவு இளைஞர்கள் குழு ஒன்று அமைதியின்மையை ஏற்படுத்துவதாக யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலின் பிரகாரம் பஸ் நிலையத்திற்கு விரைந்த பொலிஸ் குழு அங்கு அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்களை கைது செய்ய முயற்சித்துள்ளனர்.

அதன்போது இளைஞர்கள் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதேவேளை நான்கு இளைஞர்களும் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டமை, கடமைக்கு இடையூறு விளைத்தமை, பொது இடத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நான்கு இளைஞர்களும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் எனவும் அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தனின்...

4 மணி வரை மக்களின் அஞ்சலிக் காக சம்பந்தனின் பூதவுடல் வைக்கப்படும்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவதுடன், இன்றைய தினம் மாலையே திருகோணமலைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்படும் என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை, இரா. சம்பந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக கிளிநொச்சியிலுள்ள தமிழ் அரசு கட்சியின் பணிமனையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சி. சிறீதரன் எம். பியின் ஊடகப் பிரிவு நேற்று மாலை அறிவித்திருந்தது. (ஐ)

## சிறீ லங்கன்...

விளக்கமளித்தார். அரசியல் காரணங்களுக்காக, எதிர்க்கட்சிகள் இது நற்செய்தி அல்ல என்று கூறினாலும் நாட்டை பற்றி சிந்தித்தால், இது மிகவும் ஒரு நற்செய்தி என்பதைக் கூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் யாருடைய முகத்தையும் பார்க்காமல் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் அளவுகோல்களின் அடிப்படையில் மாத்திரமே மறுசீரமைப்பு செயல்பாட்டில் ஈடுபடுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கூற்றுப்படி, ஆர்ஜென்ரீனா, ஈக்வடோர், கானாவில், இருதரப்புக் கடன்களுக்காக அன்றி, வர்த்தகக் கடன்களுக்கே 25வீத கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

எமது வர்த்தக கடனை மறுசீரமைப்பதற்கான பேச்சுகளில் நாம் இன்னும் ஈடுபட்டு வருகின்றோம். அவரின் அறியாமையால் இன்னும் முடிவு எட்டப்படாத ஒரு விடயத்தைப் பற்றியே குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வலிமைக்கு ஏற்பவே இதனை செய்யுமாறு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி இந்த அளவுகோல்கள் மாறுகின்றன. இவ்வாறான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளாமல் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுவது ஏற்புடையதல்ல.

இந்த நாட்டை பேரழிவில் இருந்து மீட்பதற்கான முதல் அடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ளார். இரண்டாவது படி, அதைப் பாதுகாத்து முன்னேறுவதாகும். இல்லையேல், நாடு இரு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைக்கு திரும்புவதை தடுக்க முடியாது.

சிறீ லங்கன் விமான சேவையை மறுசீரமைக்கும் பணிகளையே நாம் மேற்கொள்கின்றோம். மாறாக அதனை விற்கவில்லை. சட்டத்தின்படி, சிறீ லங்கன் விமான சேவையில் 49வீதம் மட்டுமே வேறு நிறுவனத்துக்கு வழங்க முடியும். அதற்கும் சர்வதேச அளவில் குறைந்தபட்ச ஆர்வமே உள்ளது. அதற்கு 6 நபர்களே முன்வந்துள்ளனர். அவர்களில் பொருத்தமான எவரையும் நாங்கள் இனம் காணவில்லை. இலங்கை தொழில்முனைவோருக்கு வழங்குவதாக இருந்தாலும் அவர்களும் அவர்களின் இயலுமையை நிரூபிக்க வேண்டும்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (ஜெய்கா) அடுத்த வாரம் தமது திட்டங்களை மீண்டும் தொடங்குவது குறித்து கலந்துரையாடவுள்ளது. இது கடன் மறுசீரமைப்பின் மற்றொரு நன்மையாகும். விமான நிலையத் திட்டத்துக்கு சீன நிறுவனங்கள் முன்வந்தாலும் ஜப்பானுடன் செய்துகொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், அந்த ஒப்பந்தங்கள் ஜப்பானிய நிறுவனங்களுக்கே வழங்கப்பட வேண்டும். மேலும், பெரும் நட்டத்தை சந்தித்துவரும் மத்தள விமான நிலையத்தின் நிர்வாகம் அடுத்த சில வாரங்களில் ரஷ்ய - இந்திய கூட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இந்தியாவின் 6. 9 கோடி டொலர் நிதி உதவியின் கீழ் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் - என்றார். (ஐ)

## நயினாதீவில்...

நடுக்கடலில் படகு பயணித்துக் கொண்டிருந்தபோது கவிழ்ந்தது. இதனால், அதில் சென்ற நால்வரும் கடலில் விழுந்தனர். அவர்கள் கரையை நோக்கி நீந்தியநிலையில் கிராம மக்களின் உதவியுடன் மூவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

ஊர்காற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-01)

## நாட்டின்...

வரை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஜப்பான் அமைச்சருடனான சந்திப்பின் பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார். எமது இரு நாடுகளும் பல்வேறு துறைகள் சார்ந்து இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதையும் - விரிவுபடுத்துவதையும் முன்னிறுத்தி தொடர்ச்சியாக மிகநெருங்கிப் பணியாற்றி வந்திருக்கின்றன.

அதுமாத்திரமன்றி ஜனநாயகம், மனித உரிமைகள், திறந்த பொருளாதார செயல்பாடுகள் மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்புகள் என்பனவே எமது இரு நாடுகளுக்கு இடையில் விசேட பிணைப்பை உருவாக்கியுள்ளது. அந்தப் பிணைப்பு பரஸ்பர உயர்மட்ட பயணங்களால் மேலும் வலுவடைந்துள்ளது.

இதேவேளை தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றில் இலங்கையால் அடையப்பட்டுள்ள முன்னேற்றத்தை பொறுத்தமட்டில், உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான இடைக்கால செயலகத்தின் இயங்குகை உள்ளடங்கலாக இவ்விடயத்தில் அரசாங்கத்தால் அண்மையகாலங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவாவுடனான சந்திப்பின்போது விளக்கமளித்தேன்.

தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு ஜப்பானும் அதன் பாராட்டை வெளிப்படுத்தியுள்ளது - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## த. தே. கூட்டமை...

முன்தினம் அந்தக் கட்சியின் தலைமைப் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் பின்னர், செய்தியாளர் களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


திருகோணமலை தமிழர்களுடைய தலைநகரம். அது, நில ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி - சிங்கள மயமாகி - பௌத்த மயமாகி இருக்கும் இந்தக்கால கட்டத்தில் எங்களின் தலைவர் இரா. சம்பந்தன் மறைந்துள்ளார். அவர், நிலத்தின் விடுதலைக்காக - எங்கள் கொள்கையை - நிலைநாட்டுவதற்காக போராடினார்.

திருகோணமலை மாவட்டத்தின் அடுத்த பாராளுமன்ற உறுப்பினராக குகதாசன் நியமிக்கப்படவுள்ளார். அவரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த தலைவராகத் தெரிவு செய்வதற்கு மத்திய செயல் குழு தீர்மானித்திருக்கின்றது.

மறைந்த தலைவர் இரா. சம்பந்தனின் இறுதிக்கிரியையின் பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மத்திய செயல் குழு ஒன்றுகூடி குறித்த வெற்றிடத்துக்கு குகதாசனை நியமிக்கத் தீர்மானித்துள்ளோம். இரா. சம்பந்தனுக்கு அடுத்தபடியாக கூடுதல் வாக்குகளை குகதாசன் பெற்றமையால் அவரை நியமிப்பது என்று மத்திய குழு தீர்மானம் எடுக்கும் என நம்புகின்றேன் - என்றும் கூறினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தமிழ் அரசு கட்சி கடந்த ஆண்டு வெளியேறி விட்டது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

# கொக்குத்தொடுவாய் புதைகுழி மூன்றாம் கட்ட அகழ்வு இன்று



முல்லைத்தீவு, ஜூலை 04

கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழி அகழாய்வின் மூன்றாம் கட்டப் பணிகள் இன்று வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த மே 16 ஆம் திகதியன்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விசாரணை மீண்டும் இன்று ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியன்று கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பை பொருத்துவதற்காக கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தை தோண்டிய போது மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரிகளின் கண்காணிப்புகளின் கீழ் தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இந்த விவகாரம் தொடர்பில் இரண்டு கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அகழாய்வுகளின்படி இதுவரையில் அந்த மனிதப்புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள், இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அத்துடன் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளின்போது மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கான் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது.

இதன்மூலம் முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதான வீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும் பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அகழாய்வுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் அகழாய்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இவ்வாறான சூழலில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழாய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீண்டும் கிடைத்துள் நிலையில் சி. சி. ரி. வி. கமெரா மற்றும் காவல்துறையின் கண்காணிப்புகளின் கீழ் மீண்டும் இன்று அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மகனை அரசியலில் களமிறக்கும் மைத்திரி

கொழும்பு, ஜூலை 04

பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடமாட்டேன் என்று கூறியுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது மகனை பொலநறுவை மாவட்டத்தில் களமிறக்கவுள்ளார் என்று கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், தான் தீவிர அரசியலில் இருந்து விடைபெறவில்லை என்றும், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்றத்திற்காக தன்னால் இயன்றதை தொடர்ந்து செய்து வருவதாகவும் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

குடும்ப ஆட்சிக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டுவந்த மைத்திரிபால சிறிசேன, தனது மகனை பொதுத் தேர்தலில் களமிறக்குவது தென்னிலங்கையில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

## பருத்தித்துறை...

இந்தப் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டன. எனினும், சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## குளவி...

சங்கானை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு, அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மரண விசாரணையை நடத்தினார். (ஐ)

# இலங்கைக்கே அதிக நன்மை

### இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா

கொழும்பு, ஜூலை 04

தற்போதுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பலன் இந்திய ஏற்றுமதியாளர்களைவிட இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கே அதிகம் கிடைத்துள்ளது என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள விருந்தகமொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியா - இலங்கைக்கான இரு தரப்பு உறவுகளும் மிகச் சிறந்த முறையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## ஜனாதிபதித்...

பிரபல வர்த்தகரான சி.டி.லீனா இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு எதிர்வரும் 8ஆம் திகதி முதல் ஐந்து நீதியரசர்கள் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வரவுள்ளது.

மனுவில், இந்த வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை தேர்தல் திகதி அறிவிப்பு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த மனுவுக்கு எதிராக பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் உட்பட பல தரப்பினரும் இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்வர் என்று தெரியவருகின்றது.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6 வருடங்களிலிருந்து, 5 வருடங்களாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக மனுதாரர் கூறியுள்ளார். இதன்மூலம் மக்களின் இறையாண்மை மீறப்பட்டுள்ளதாகவும், அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இந்த மனுவால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பாதிப்படையாது என்று சட்ட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 04

நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 298 ரூபாய் 73 சதமாகவும் விற்பனைப் பெறுமதி 308 ரூபாய் 17 சதமாகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 377 ரூபாய் 62 சதம், விற்பனைப் பெறுமதி 392 ரூபாய் 38 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 319 ரூபாய் 25 சதம், விற்பனைப் பெறுமதி 332 ரூபாய் 73 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 217 ரூபாய் , விற்பனைப் பெறுமதி 226 ரூபாய் 54 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 198 ரூபாய் 96 சதம், விற்பனைப் பெறுமதி 209 ரூபாய் 15 சதமாகப் பதிவாகியுள்ளது. (அ)

## ஜனாதிபதி ரணிலின் பதவிக்காலம் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல்!

கொழும்பு, ஜூலை 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் குறித்து அரசியலமைப்பின் பிரகாரம் விளக்கமளிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு தொழிலதிபர் சி.டி.லெனவவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவூட்டும்வரை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைகாலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறும் குறித்த மனுவில் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நெல் அறுவடையின் அளவை இரட்டிப்பாக்க நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 04

தற்போது கிடைக்கும் நெல் அறுவடையின் அளவை எதிர்வரும் ஆறு போகங்களில் இரட்டிப்பாக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ள இலக்கை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்தார்.

இதற்காகத் தொழில்நுட்ப பொதி ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாரம்பரிய விவசாயத் தொழிலுக்கு அப்பால் அதிகரித்து வரும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை விவசாய அமைச்சு வெற்றிகரமாக நிர்வகித்து வருகின்றது.விவசாயத் துறைக்குப் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதன் பலன்கள் ஏற்கனவே கிடைத்துள்ளதாகவும் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்தார். (அ)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவர் கைது

கொழும்பு, ஜூலை 04

குருநாகல் பிரதேசத்தில் கிரிபாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹெட்டிஆராச்சிகம பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வு பணியில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிரிபாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிபாவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வராவெவ மற்றும் அரநாயக்க ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20,27 மற்றும் 39 வயதுடைய மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து மாணிக்கக் கல் அகழ்வு பணிக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மனித உரிமைகளை மீறியவர்கள் கட்டாயம் தண்டிக்கப்படவேண்டும்

### மடு திருவிழாவில் கர்தினால் மல்கம் ரஞ்சித்

மன்னார், ஜூலை 04

**மனித உரிமைகளை மீறியவர்கள் தண்டிக்கப்படவேண்டும் எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

**மன்னார் மருதமடு அன்னை முடி சூடிய நூற்றாண்டு திருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் அங்கு மெலும் தெரிவிக்கையில்-

இனங்களுக்கு இடையில் பேதங்களை ஏற்படுத்தி முரண்பாடுகளை உண்டாக்கியவாறு முன்னெடுத்துச் செல்லப்பட்ட கொள்கை, ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் மேலும் வலுவடைந்தது.

இன, மத பேதங்களை உண்டாக்கியதுடன், நாட்டைத் துண்டாக்கி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்த அரசியல்வாதிகளே இவ்வாறான கொள்கைகளைக் கொண்டு சென்றதுடன், தொடர்ந்தும் கொண்டு செல்கின்றனர்.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசப்படும் தற்போதைய நாட்களில் தமிழ் மக்கள் தங்களது அடையாளத்தை வலுப்படுத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும்.

இன, மத பேதங்களைத் தூண்டிவிட்டு, ஸ்திரமற்ற நிலையை உருவாக்கியவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தப்பட வேண்டும் - என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பிக்கு மக்களின் ஆதரவு குறையவில்லை

கொழும்பு, ஜூலை 04

பொதுத்தேர்தல் வாக்களிப்பு குறித்து பொதுமக்கள் மத்தியில் காணப்படும் நோக்கங்கள் குறித்த புதிய ஆய்வினை மேற்கொண்டுள்ள ஐ.எச்.பி. நிறுவனம் (Institute for Health Policy's) மக்கள் மத்தியில் ஐக்கிய மக்கள் சக்திக்கும் தேசிய மக்கள் சக்திக்குமான ஆதரவு குறைவடையவில்லை என தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்திக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் 34 வீதமான மக்களின் ஆதரவு காணப்படுவதாக ஐஎச்பி அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுஜனபெரமுனவிற்கு 13 வீதமானவர்களும் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆறு வீதம் இலங்கை தமிழரசுக்கட்சி நான்கு வீதமும் ஆதரவு காணப்படுவதாக ஐ.எச்.பி. தெரிவித்துள்ளது.

மே மாதம் மேற்கொண்ட கருத்துக்கணிப்புகள் மூலம் இது தெரியவந்துள்ளதாக ஐ.எச்.பி. கூறியுள்ளது.

மே மாத மதிப்பீடுகள் மற்றும் நான்கு பிரதான கட்சிகளிற்கும் 1-5 வீத தவறுகளுக்கான சாத்தியங்களுடன் தொடர்புபட்டவை என அது குறிப்பிட்டுள்ளது.

இந்த மே அறிக்கை ஒக்ரோபர் 2021 முதல் இலங்கை முழுவதும் நடத்தப்பட்ட 17751 நேர்காணல்களையும் மே 2024 இல் மேற்கொள்ளப்பட்ட 503 நேர்காணால்களையும் அடிப்படையாக கொண்டது என கருத்துக்கணிப்பை மேற்கொண்ட அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# இந்தியாவில் 267 கிலோ தங்கம் கடத்தல் இலங்கையரை தேடி விசாரணை தீவிரம்

சென்னை, ஜூலை 04

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாரிய தங்கக் கடத்தல்களில் ஈடுபட்டு வரும் குழு ஒன்று தொடர்பான விசாரணைகளை, இந்திய சுங்க அதிகாரிகள் விரிவுப்படுத்தியுள்ளனர்.

இந்திய ஊடகங்களின் தகவல் படி, இந்த கடத்தல்களுக்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றம் சுமத்தப்படும் இந்திய விமானச் சேவைகள் பிரிவின் உயர் அதிகாரி ஒருவரும் விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

சப்ரி அலி என்ற நபர் தலைமையில் 8 பேர் கொண்ட குழு ஒன்று கடந்த 60 நாட்களில் 167 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான 267 கிலோ தங்கத்தை இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்குக் கடத்தியுள்ளது.

இந்தக் குழு இந்திய விமான நிலையங்களுக்குள் எவ்விதச் சந்தேகங்களும் இன்றி எவ்வாறு செயற்பட்டிருக்கிறது என்பது தொடர்பான தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இத்தாலியில் வசிக்கும் தம்பதி பெயரில் யாழில் விவாகரத்து!

### சட்டத்தரணியின் அலுவலகத்தில் பொலிஸார் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 04

வெளிநாட்டில் வசிக்கும் தம்பதியினரின் பெயரில் யாழ்ப்பாணத்தில் விவாகரத்து பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சட்டத்தரணியின் அலுவலகத்தில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் திருமணமாகி இத்தாலியில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு இடையில், சில வருடங்களுக்கு முன்னர் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு இருவரும் இத்தாலியில் பிரிந்து வாழ்ந்துள்ளனர்.

இந்நிலையில் கணவன், சாவகச்சேரிப் பகுதியில் வசிக்கும் தனது சகோதரியிடம், தமக்கு யாழ்ப்பாணத்தில் திருமணம் நடைபெற்றமையால் யாழ்ப்பாணத்தில் விவாகரத்திற்கு விண்ணப்பித்து விவாகரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க கூறியுள்ளார்.

அதனை அடுத்து சகோதரி யாழ்ப்பாணத்தில் உள்ள பெண் சட்டத்தரணி ஒருவரை நாடி , வெளிநாட்டில் உள்ள தம்பதியினருக்கு யாழ்ப்பாணத்தில் விவாகரத்து பெற்று தருமாறு கோரியுள்ளார்.

அதனை அடுத்து சட்டத்தரணி , தனது கனிஷ்ட சட்டத்தரணிகள் இருவரை கணவனுக்கு ஒருவரையும், மனைவிக்கு ஒருவரையும் நிய மித்து சாவகச்சேரி நீதிமன்றில் விவகாரத்துக்கு விண்ணப்பித்து, வழக்கு விசாரணைகளை முன்னெடுத்து நாட்டில் இல்லாத இருவருக்கும் விவாகரத்து பெற்றுக்கொடுத்துள்ளார்.

விவாகரத்து பெற்று சில காலத்தின் பின்னர் , இத்தாலியில் வசித்து வந்த பெண் , யாழ்ப்பாணம் வருகை தந்து பிறிதொரு சட்டத்தரணி ஊடாக தனக்கு விவாகரத்துக்கு நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தவேளை , அப்பெண்ணுக்கு ஏற்கனவே விவாகரத்து கிடைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

நாட்டில் இல்லாத தனக்கு தன்னுடைய சம்மதம் எதுவும் பெறப்படாத நிலையில் எவ்வாறு விவாகரத்து வழங்கப்பட்டது என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அது தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விவாகரத்து நடவடிக்கையை முன்னெடுத்த சட்டத்தரணியின் அலுவலகத்தைச் சோதனையிட நீதிமன்ற அனுமதி பெற்ற பொலிஸார் அலுவலகத்தைச் சோதனையிட்டதுடன் ,கணினி உள்ளிட்டவையுடன் அலுவலகத்தில் உள்ள கோப்புக்களையும் சோதனையிட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org